**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 107/2023 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | கனகராணி |
| Father Name | : | நாச்சிமுத்து |
| Village | : | கோவை புதூர் |
| Taluk | : | கோவை |
| Age | : | 61 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.07.2025

**முதல் விசாரணை**

நான் திருப்பூர் மாவட்டம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது கோவை மாவட்டம் கோவைபுதூரில் வசித்து வருகிறேன். 13.02.2023 ஆம் தேதி ஊரக நலப்பணியில் இணை இயக்குநராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் குறை தீர்க்கும் நாளில் புகார் மனு பெறப்பட்டது. அந்த புகார் மனுவில் பிளஸ்சி என்பவர் தாராபுரம் – கொடுவாய் செல்லும் சாலையில் சுகம் கிளினிக் என்ற பெயரில் மருத்துவர் அல்லாது மருத்துவம் பார்த்துக்கொண்டிருப்பதாக புகார் பெறப்பட்டது. அந்த புகாரின் அடிப்படையில் 23.02.2023 ஆம்தேதி காலை சுமார் 11.30 மணியளவில் என்னுடைய தலைமையில் என்னுடன் அலுவலக கண்காணிப்பாளர் திரு.ஹரிகோபாலகிருஷ்ணன் மற்றும் மற்றொரு அலுவலக கண்காணிப்பாளர் ரமேஷ் குமார் ஆகியோர்கள் மேற்படி சுகம் கிளினிக்கிற்கு திடீர் ஆய்வு செய்ய வேண்டி சென்றோம். மேற்படி கிளினிக்கிற்கு 4, 5 நபர்கள் மருத்துவம் பார்ப்பதற்காக காத்திருப்போர் இடத்தில் இருந்தனர். மேலும் உள்ளே சென்று பார்த்தபோது வழக்கின் எதிரி பிளஸ்சி தனது அறையில் ஒரு நபருக்கு மருத்துவம் பார்த்து கொண்டிருந்தார். அந்த அறையில் மருத்துவம் பெறுவதற்காக மற்றொரு நபரும் காத்துக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி மருத்தவம் பார்த்துக்கொண்டிருந்த நபருக்கு இரத்த அழுத்தம் பார்த்தும், ஊசி மருந்துகள் செலுத்தியும் மேலும் அந்த நபருக்கு குளுக்கோஸ் செலுத்துவதற்காக மேற்கண்ட

உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. அவரை விசாரித்தபோது பக்கத்து அறையில் வேறு ஒரு மருத்துவர் மருத்துவம் பார்த்துக்கொண்டிருப்பதாக ஆஜர் எதிரி எங்களிடம் கூறினார். பின்னிட்டு அவர் சுட்டிக்காட்டிய அறையை சென்றுபார்த்தபோது ஒரு மருத்துவர் அந்த அறையில் அமர்ந்திருந்தார். அவரை விசாரித்தபோது தனது பெயர் தமிழ்செல்வன் என்றும் சம்பவத்திற்கு முந்தைய நாள்தான் சுகம் கிளினிக்கிற்கு பணிக்கு சேர்ந்ததாக கூறினார். மேலும், அவரை விசாரித்தபோது அவர் கொடுத்த மருத்துவச் சான்றிதழ் மற்றும் அவருடைய பதிவு எண் ஆகியவற்றை சரிபார்த்தபோது அவர் ஒரு மருத்துவர் என ஊர்ஜிதம் ஆனது. பின்னிட்டு மருத்துவம் பெறுவதற்காக காத்திருந்த நபர்களை விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் தங்களுக்கு இதற்கு முன்பு மருத்துவம் பார்த்ததாகவும், ஊசிகளை போட்டதாகவும் மருந்து மாத்திரைகள் பரிந்துரைத்ததாகவும் கூறினார்கள். மேலும் அவரை விசாரித்தபோது எங்கள் விசாரணையில் அவர் சரியான முறையில் பதில் அளிக்கவில்லை. மேலும், ஒரு மருத்துவர் நோயாளி குறித்து சிகிச்சை அளிக்கவேண்டும் எனில் TN Clinical Establishment ACT மற்றும் Indian Medical Council ACT அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் ஆஜர் எதிரி அவ்வாறு மேற்படி சட்டத்தின் கீழ் எந்தவொரு அங்கீகாரமும் பெறவில்லை. மேலும், ஆஜர் எதிரி நடத்தி வந்த கிளிக்கை ஆய்வு செய்தபோது பயன்படுத்தப்பட்ட பஞ்சுகள், மருந்துகள், குளுக்கோஸ் பாட்டில்கள் ஆகியவை முறையே Tamil Nadu Bio Medical Waste Management விதிகள் எதையும் பின்பற்றாமல் ஆங்காங்கே சிதறிக்கிடந்தது. மேலும், அங்கிருந்த நபர்களை விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் அங்கு வரும் நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தது உறுதியானது. பின்னிட்டு ஊதியூர் காவல் நிலையத்திற்கு இது சம்பந்தமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் ஊதியூர் காவல் நிலையம் தலைமைக்காவலர் ரவி சம்பவ இடத்திற்கு வந்த பிறகு அவரது முன்னிலையில் மேற்படி கிளினிக்கை நாங்கள் சீல் வைத்து மூடினோம். பின்னிட்டு ஆஜர் எதிரியிடம் விசாரணைக்காக அவரது சான்றிதழ்களை ஒரு வாரத்திற்குள் கொண்டுவந்து எங்களது திருப்பூர் அலுவலகத்தில் சமர்பிக்குமாறு கூறினோம். அதன்படி 27.02.2023 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் மாவட்ட கலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஆஜர் எதிரி விசாரணைக்காக வந்தார். அவ்வாறு விசாரணைக்கு வந்தபோது எந்தவொரு ஆவணங்களும் கொண்டுவரவில்லை. அவரது ஆவணங்கள் கேரளா

மூணாறில் இருந்து வருவதாக சொல்லி அன்று மாலை வரை அலுவலகத்திலேயே காத்திருந்தார். பின்னிட்டு மறுநாள் மேற்படி ஆவணங்களை பெற்று விசாரணைக்கு வரும்மாறு ஆஜர் எதிரியிடம் கூறினோம். அதன்படி ஆஜர் எதிரி மறுநாள் சில ஆவணங்களை விசாரணைக்கு கொண்டுவந்து சமர்பித்தார். அதனை பார்த்தபோது லேப் டெக்னீசியனாக மட்டுமே அவர் பயிற்சி பெற்றதாக Certificate வைத்திருந்தார். நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்ததற்கான முறையான சான்றிதழ் எதையும் அவர் வைத்திருக்கவில்லை. பின்னர் அது குறித்து கேள்வி பதில் முறையில் விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் போதிய பயிற்சி இல்லாமல் போலி மருத்துவம் பார்த்ததாக ஒப்புக்கொண்டார். மேலும் விசாரணையில் 2018 ஆம் ஆண்டு இதே போல் போலி மருத்துவம் பார்த்து அவர் மீது ஒரு குற்ற வழக்கு பதியப்பட்டதை ஒப்புக்கொண்டார். மேலும், அந்த வழக்கு சம்பந்தமாக 20 முறைக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜரானதாகவும் கூறினார். எங்கள் விசாரணையில் ஆஜர் எதிரி போலி மருத்துவம் பார்த்தது உறுதியானதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஊதியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் ஆஜர் எதிரி எங்களது விசாரணையில் எங்கள் முன்னாள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். **அந்த ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## <u>குறுக்கு விசாரணை</u>

காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் எழுத்து மூலமான புகாரா அல்லது தட்டச்சு செய்யப்பட்ட புகாரா என்றால் அது எழுத்து மூலமான புகாராகும். அந்த புகாரைத்தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரானது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 27.02.2023 அன்று ஊதியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. 13.02.2023 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட புகாரை காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளோனா என்றால் புகாருடன் இணைத்து ஒப்படைத்துள்ளோம். 13.02.2023 அன்று கொடுக்கப்பட்ட புகாருக்கு மாவட்ட ஆட்சியர் எங்களுக்கு விசாரணை செய்ய எழுத்து மூலமாக கடிதம் கொடுத்தார். அந்த கடிதத்தையும் போலீசாரிடம் ஒப்படைத்தேன்.

23.02.2023 ஆம் தேதியில் நானும், என்னுடன் 2 கண்காணிப்பாளர்களும் ஆய்வுக்கு சென்றோம். வேறு யாரும் எங்களுடன் வரவில்லை. காலை 11.00 மணிக்கு ஆய்வுக்கு சென்றோம். அங்கு 1 மணிநேரம் இருந்தோம். அன்றைய தேதியில் நாங்கள் ஊதியூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடன் வந்த கண்காணிப்பாளர்கள் யாரும் அன்றைய தினம் காவல் நிலையம் செல்லவில்லை. நாங்கள் ஆய்வுக்கு செல்லும்போது கிராம நிர்வாக அலுவலரிடம் தகவல் சொல்லியிருந்தோம். அவரும் வந்திருந்தார். காவல் நிலையம் 27.02.2023 ஆம் தேதிதான் சென்றேன். அதற்கு முன்பாக செல்லவில்லை. சுகம் மருத்துவமனை இடமானது சமார் 10க்கு 10 அளவுள்ள இடம் என்றால் சரிதான். அந்த 10க்க 10 ரூமானது இரண்டாக பிரிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் மருத்துவர் தமிழ்செல்வன் என்பவர் மருத்துவமனையில் இருந்தாரா என்றால் இருந்தார். உள் அறையில் மருத்துவர் தமிழ்செல்வன் என்பவர் அமர்ந்திருந்தார். அவர் மருத்துவம் படித்த மருத்துவர் என்றால் சரிதான். மருத்துவ அறைக்கு வெளியில் நோயாளிகள் காத்திருக்கும் இடமும் இருக்கும் என்றால் சரிதான். அதே அறையில் எதிரியும் அமர்ந்திருந்தார் என்றால் சரியல்ல. வேறு அறையில் எதிரி அமர்ந்திருந்தார். அந்த அறையில்தான் நோயாளிகள் அமர்ந்திருந்தார். அந்த 10 க்கு 10 இடத்தில் எத்தனை அறை உள்ளது என்றால் இரண்டு பார்ட்டீசியன் அறை மற்றும் வெயிட்டிங் ஹால் உள்ள இடம் என்றால் சரிதான். மருத்துவர் தமிழ்செல்வன் இருந்த அறையில் ஊசி போடும் டேபிள் இருந்ததா என்றால் இல்லை. ஆஜர் எதிரி இருந்த அறையில்தான் அனைத்து உபகரணங்களும் இருந்தது. மருத்துவர் காயத்திரி சண்மதி என்பவர் அதற்கு முன்பாக மருத்துவமனையில் நோயளிகளுக்கு சிகிச்சை அளித்துவிட்டு இருந்தார் என்பதை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் அவர்கள் அன்றைய தினம் பணியில் இல்லை. மேலும் விசாரித்தபோது அவ்வாறு ஒரு மருத்துவர் பணியில் இல்லை என தெரிந்துகொண்டேன். மருத்துவர் காயத்திரி சண்மதி என்பவரை விசாரித்தேனா என்றால் இல்லை. நான் ஆய்வுக்கு செல்லும்போது எத்தனை நோயாளிகள் இருந்தார்கள் என்றால் 7 நோயாளிகள் இருந்தார்கள். அவர்கள் பெயர்களை கேட்டு விசாரித்து தெரிந்துகொண் டேனா என்றால் உள்ளூர்காரர்கள் என்று சொன்னார்கள். அங்கு ஒரு ஆணும் 6 பெண்களும் இருந்தார்கள். அவர்கள் பெயர் விபரங்களை நான் கேட்டுத்தெரிந்துகொள்ளவில்லை. மருத்துவர் பிளஸ்சி என்ற

பெயரில் லெட்டர் பேடு எதாவது இருந்ததா என்றால் இல்லை. பெயர் இல்லாமல் ஒரு லெட்டர் பேடு இருந்தது. அதனை போலீசிடம் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். அதில் பிளஸ்சி என்று எந்த கையொப்பமும் இல்லை. பிளஸ்சி என்ற மருத்தவ போர்டும் இல்லை. எதிரியின் பெயர் மருத்துவமனையில் எந்த இடத்திலும் இல்லை. அவர் மருத்துவர் என்று சொல்லி எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி வைத்தியம் பார்த்ததாக கூறியவரிடம் நான் எந்த விசாரணையும் செய்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் விசாரித்தேன் ஆனால் வாக்கமூலம் வாங்கவில்லை. நான் விசாரித்தவரின் பெயர்  தெரியாது என்றால் சரிதான். மேற்படி நபர் எதிரி தனக்கு வைத்தியம் பார்த்ததாக புகார் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிரி ஊசி போட்டதாக கூறியுள்ள நிலையில் அந்த நபரின் பெயர் என்ன என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. பொதுமக்கள் சாட்சிகள் யாரும் என்னிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மருந்துகள்,  மாத்திரைகள், ஊசி, மருத்துவ கருவிகள், இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவு அளக்கும் கருவிகள் எதையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மருத்துவம் பார்த்ததாக பயன்படுத்தப்படும் டெத்தஸ்கோப் கருவியை கைப்பற்றினேனா என்றால் அங்கு இருந்தது ஆனால் கைப்பற்றப்படவில்லை. மருத்துவமனையில் இருந்த உபகரணங்கள் அனைத்தும் மருத்துவர் தமிழ்செல்வன் பயன்படுத்திய உபகரணங்கள் என்றும், எதிரி எந்த உபகரணங்களையும் பயன்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. அனைத்து உபகரணங்களும் எதிரி இருந்த அறையில்தான் இருந்தது. எதிரி அன்றைய தினம் மருத்துவம் பார்க்க வரும் நோயாளிகளுக்கு டோக்கன் கொடுக்கும் பணியை செய்து வந்தார் என்றால் சரியல்ல. சுகம் மருத்துவமனையில் பிளஸ்சி என்ற பெயரில் எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான். மருத்துவர் தமிழ்செல்வன் என்பவரின் ஆவணங்கள் இருந்தது என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து மருந்து விற்பனை செய்ததாக மருந்துகள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். மருந்து இருந்த விபரத்தை காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன். மருந்துகள் வாங்கியது விற்பனை செய்தது சம்பந்தமாக இரசீதுகள்  காவல் துறையிம் ஒப்படைத்தேனா என்றால் விசாரணையில் ஒப்படைத்தேன்.  MBBS படித்த மருத்துவர் தமிழ்செல்வன் ஊசி, மருந்துகள் கொடுப்பதற்கு தகுதியான மருத்துவர் என்றால்

சரிதான். அன்றைய தினம் அவர் மருத்துவமனையில் பணியில் இருந்தார் என்றால் சரிதான். மருத்துமனையில் மருந்து விற்பனை செய்ததாக எந்த ஆதாரமும் இல்லை. சுகம் கிளினிக் என்ற போடுதான் இருந்தது சுகம் மருத்துவமனை என்ற போர்டு இல்லை என்றால் சரிதான். மருத்துவ மனையில் மருத்துவ கழிவுகள் இருந்ததை நான் புகைப்படம் எடுத்து காவல் துறையிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரி மருத்துவமனையில் யாருக்கும் எந்த சிகிச்சையும் அளிக்கவில்லை என்றும்,அன்றைய தினம் மருத்துவ பணியில் இருந்த தமிழ்செல்வம் தான் சிகிச்சை அளித்தார் என்றும் சொன்னால் சரியல்ல. சுகம் கிளினிக் என்ற பெயரில் ஒவ்வொரு மாதமும் பையோ மெட்ரிக் கட்டிணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தால் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் நான் பார்த்தபோது எதிரி இருந்த அறையில் மருத்துவ கழிவுகள் சிதறி கிடந்தது. எந்த ஆவணமும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். தனி நபர் புகார் எதுவும் என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். தனிநபர் யாரையும் விசாரித்து வாக்கமூலம் வாங்கவில்லை. 27.02.2023, 28.02.2023 ஆம் தேதிகளில் விசாரணைக்கு ஆஜர் ஆக சொல்லி குறிப்பனை கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வாய்மொழியாகத்தான் ஆஜராக சொன்னோம். 23.02.2023 ஆம் தேதி புகார் கொடுக்காததற்கு காரணம் எதாவது உள்ளதா என்றால் எங்களது அலுவலக துறை விசாரணையை முடித்து பின்புதான் புகார் கொடுத்தேன். 5 நாட்கள் காலதாமதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியை சம்பவத்திற்கு மறுநாளே விசாரணைக்கு ஆஜராக சொன்னோம். ஆனால் எதிரி தனது சான்றிதழ்கள் எல்லாம் வெளியூரில் இருப்பதாக சொல்லி 27.02.2023 அன்று விசாரணைக்கு ஆஜர் ஆனார்.ஒரு மருத்துவர் பணியில் இருக்கும்போது மருத்துவமனையை பூட்டி சீல் வைக்க முடியாது என்று சொன்னால் சரிதான். எனக்கு மருத்துவ மனையை பூட்டி சீல் வைக்க சொல்லி யார் உத்தரவிட்டார் என்றால் திருப்பூர் மவாட்ட ஆட்சியார் சொல்லித்தான் சீல் வைத்தேன். மாவட்ட ஆட்சியர் எழுத்து மூலமாக எனக்கு எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து மருந்துகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மருத்துவமனை எத்தனை ஆண்டுகள் இயங்கிவந்தது என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் தற்போது ஞாபகம் இல்லை. எதிரி எந்த தனிநபருக்கும் மருத்துவர் என்று சொல்லி மருத்துவம் எதுவும் பார்க்கவில்லை என்றும், அந்த மருத்துவமனையில்

முறையான மருத்துவர்தான் வைத்தியம் பார்த்தார் என்றும் எதிரி எந்த வைத்தியமும் செய்யவில்லை என்றும் விடுதலை சிறுத்தை கட்சியினர் உண்மைக்கு புறம்பான காரணங்களை கூறி எதிரியை மிரட்டி பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கில் பலமுறை தகராறு செய்து வந்தும், மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட தவறான புகாரின் பேரில் நாங்கள் விசாரணைக்கு சென்றபோது எந்த ஆவணங்களும் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படாத நிலையில் எங்கள் முன்னிலையில் எவ்வித ஒப்புதல் வாக்கமூலமும் கொடுக்கவில்லை என்றும், மறுநாள் நாளிதழ் மற்றும் சமூக வலைதளங்களில் போலி மருத்துவர் கைது என்று பரவிய செய்தியை வைத்துக்கொண்டு 5 நாட்கள் காலதாமதாக பின் யோசனையின் பேரில் எவ்வித ஆவணங்களும் இல்லாமல் எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.07.18 19:02:20 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 107/2023 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | ஹரிகோபாலகிருஷ்ணன் |
| Fathers Name | : | பாலசுப்பரமணியம் |
| Village | : | திருப்பூர் |
| Taluk | : | திருப்பூர் |
| Age | : | 49 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.07.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலுவலகத்தில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். 13.02.2023 ஆம் தேதி ஊரக நலப்பணியில் இணை இயக்குநராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் குறை தீர்க்கும் நாளில் புகார் மனு பெறப்பட்டது. அந்த புகார் மனுவில் பிளஸ்சி என்பவர் தாராபுரம் – கொடுவாய் செல்லும் சாலையில் சுகம் கிளினிக் என்ற பெயரில் மருத்துவர் அல்லாது மருத்துவம் பார்த்துக்கொண்டிருப்பதாக புகார் பெறப்பட்டது. அந்த புகாரின் அடிப்படையில் 23.02.2023 ஆம்தேதி காலை சுமார் 11.30 மணியளவில் இணை இயக்குநராக கணகராணி அவர்கள் தலைமையில் நானும் என்னுடன் அலுவலக கண்காணிப்பாளர் ரமேஷ் குமார் ஆகியோர்கள் மேற்படி சுகம் கிளினிக்கிற்கு திடீர் ஆய்வு செய்ய வேண்டி சென்றோம். மேற்படி கிளினிக்கிற்கு 5,6 நபர்கள் மருத்துவம் பார்ப்பதற்காக காத்திருப்போர் இடத்தில் இருந்தனர். மேலும் உள்ளே சென்று பார்த்தபோது வழக்கின் எதிரி பிளஸ்சி தனது அறையில் ஒரு நபருக்கு மருத்துவம் பார்த்து கொண்டிருந்தார். அந்த அறையில் மருத்துவம் பெறுவதற்காக மற்றொரு நபரும் காத்துக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி மருத்தவம் பார்த்துக்கொண்டிருந்த நபருக்கு இரத்த அழுத்தம் பார்த்தும், ஊசி மருந்துகள் செலுத்தியும் மேலும் அந்த

நபருக்கு குளுக்கோஸ் செலுத்துவதற்காக மேற்கண்ட உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. அவரை இணை இயக்குநர் விசாரித்தபோது பக்கத்து அறையில் வேறு ஒரு மருத்துவர் மருத்துவம் பார்த்துக்கொண்டிருப்பதாக ஆஜர் எதிரி எங்களிடம் கூறினார். பின்னிட்டு அவர் சுட்டிக்காட்டிய அறையை சென்றுபார்த்தபோது ஒரு மருத்துவர் அந்த அறையில் அமர்ந்திருந்தார். அவரை விசாரித்தபோது தனது பெயர் தமிழ்செல்வன் என்றும் சம்பவத்திற்கு முந்தைய நாள்தான் சுகம் கிளினிக்கிற்கு பணிக்கு சேர்ந்ததாக கூறினார். மேலும் அவரது பணிநேரம் என்ன என்று விசாரித்தபோது தனது பணி நேரம் காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணிவரை என்று கூறினார். மேலும், அங்கிருந்த மருத்துவர் வழங்கிய மருந்துச்சீட்டை விசாரித்தபோது அந்த சீட்டை தான் எழுதவில்லை என்று கூறினார். அங்கிருந்த நோயாளிகளை விசாரித்தபோது ஆஜர் எதிரி பிளஸ்சிதான் மருந்துச்சீட்டை எழுதிக்கொடுத்தார் என்று கூறினார். மேலும், அவரை விசாரித்தபோது அவர் கொடுத்த மருத்துவச் சான்றிதழ் மற்றும் அவருடைய பதிவு எண் ஆகியவற்றை சரிபார்த்தபோது அவர் ஒரு மருத்துவர் என ஊர்ஜிதம் ஆனது. பின்னிட்டு மருத்துவம் பெறுவதற்காக காத்திருந்த நபர்களை விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் தங்களுக்கு இதற்கு முன்பு மருத்துவம் பார்த்ததாகவும், ஊசிகளை போட்டதாகவும் மருந்து மாத்திரைகள் பரிந்துரைத்ததாகவும் கூறினார்கள். மேலும் அவரை விசாரித்தபோது எங்கள் விசாரணையில் அவர் சரியான முறையில் பதில் அளிக்கவில்லை. மேலும், ஒரு மருத்துவர் நோயாளி குறித்து சிகிச்சை அளிக்கவேண்டும் எனில் TN Clinical Establishment ACT மற்றும் Indian Medical Council ACT அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் ஆஜர் எதிரி அவ்வாறு மேற்படி சட்டத்தின் கீழ் எந்தவொரு அங்கீகாரமும் பெறவில்லை. மேலும், ஆஜர் எதிரி நடத்தி வந்த கிளிக்கை ஆய்வு செய்தபோது பயன்படுத்தப்பட்ட பஞ்சுகள், மருந்துகள், குளுக்கோஸ் பாட்டில்கள் ஆகியவை முறையே Tamil Nadu Bio Medical Waste Management விதிகள் எதையும் பின்பற்றாமல் ஆங்காங்கே சிதறிக்கிடந்தது. அது குறித்து ஆஜர் எதிரியிடம் இணை இயக்குநர் விசாரித்தபோது தான் பயன்படுத்தியதாக கூறினார். மேலும், அங்கிருந்த நபர்களை விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் அங்கு வரும் நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தது உறுதியானது. பின்னிட்டு ஊதியூர் காவல் நிலையத்திற்கு இது சம்பந்தமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும், கிராம நிர்வாக அதிகாரிக்கும் இது குறித்து தகவல்

தெரிவிக்கப்பட்டது. பின்னர் ஒரு மணிநேரம் கழித்து ஊதியூர் காவல் நிலையம் தலைமைக்காவலர் ரவி சம்பவ இடத்திற்கு வந்த பிறகு அவரது முன்னிலையில் மேற்படி கிளினிக்கை நாங்கள் சீல் வைத்து மூடினோம். பின்னிட்டு ஆஜர் எதிரியிடம் விசாரணைக்காக அவரது சான்றிதழ்களை ஒரு வாரத்திற்குள் கொண்டுவந்து எங்களது திருப்பூர் அலுவலகத்தில் சமர்பிக்குமாறு கூறினோம். அதன்படி 27.02.2023 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் மாவட்ட கலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஆஜர் எதிரி விசாரணைக்காக வந்தார். அவ்வாறு விசாரணைக்கு வந்தபோது எந்தவொரு ஆவணங்களும் கொண்டுவரவில்லை. அவரது ஆவணங்கள் கேரளா மூணாறில் இருந்து வருவதாக சொல்லி அன்று மாலை வரை அலுவலகத்திலேயே காத்திருந்தார். பின்னிட்டு மறுநாள் மேற்படி ஆவணங்களை பெற்று விசாரணைக்கு வரும்மாறு ஆஜர் எதிரியிடம் கூறினோம். அதன்படி ஆஜர் எதிரி மறுநாள் 28.02.2023 ஆம் தேதி சில ஆவணங்களை விசாரணைக்கு கொண்டுவந்து சமர்பித்தார். Bharath Sevak Samaj என்ற நிறுவனத்தின் மூலமாக பெறப்பட்ட Diplamo in Lab Technician ஆக பயிற்சி பெற்றதாக Certificate வைத்திருந்தார். ஆனால் மேற்படி சான்றிதலும் Tamil Nadu Para Medical Council ல் பதிவு செய்ய இயலாத சான்றாகும். இந்த சான்றிதழை வைத்துக்கொண்டு எவ்வாறு நோயாளிகளுக்க சிகிச்சை அளிக்கிறீர்கள் என்று விசாரித்தபோது சரியாக பதில் கூறவில்லை. பின்னர் அது குறித்து கேள்வி பதில் முறையில் விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் போதிய பயிற்சி இல்லாமல் அலோபதி முறையில் போலி மருத்துவம் பார்த்ததாக ஒப்புக்கொண்டார். மேலும் விசாரணையில் 2018 ஆம் ஆண்டு சித்தா முறையில் போலி மருத்துவம் பார்த்ததாக அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் அவர் மீது ஒரு குற்ற வழக்கு பதியப்பட்டதை ஒப்புக்கொண்டார். மேலும், அந்த வழக்கு சம்பந்தமாக 20 முறைக்கு மேல் பல்லடம் நீதிமன்றத்தில் ஆஜரானதாகவும் கூறினார். எங்கள் விசாரணையில் ஆஜர் எதிரி போலி மருத்துவம் பார்த்தது உறுதியானதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஊதியூர் காவல் நிலையத்தில் இணை இயக்கநர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் புகார் கொடுக்க உடன் செல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் 28.02.2023 அன்று எதிரியுடன் சென்று புகார்

கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்கள் மூவரை தவிர உடன் யாரும் செல்லவில்லை. கிராம நிர்வாக அலுவலர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். ஆய்வு சோதனைக்கு சென்ற அன்று நாங்கள் காவல் நிலையம் செல்லவில்லை. மருத்துவமனை சுமாராக எவ்வளவு சதுர அடி இருக்கும் என்றால் 300 சதுர அடி இருக்கும். அதில் எத்தனை அறைகள் இருந்தது என்றால் மருத்துவர் அறை ஒன்று, ஊசி போடும் அறை ஒன்று, நோயாளிகள் அறை ஒன்றும் இருந்தது. நோயளிகள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 7,8 பேர் இருந்தார்கள். எத்தனை ஆண்கள் எத்தனை பெண்கள் என தெரியாது. அன்றைய தினம் மருத்துவர் தமிழ்செல்வன் பணியில் இருந்தார் என்றால் சரிதான். மருத்துவமனையில் மருந்துகள் விற்பனை செய்யும் மெடிக்கல் கிடையாது என்றால் சரிதான். ஆனால் நோயாளிகள் அமரும் இடத்தில் இரண்டு ரேக்களில் மருந்துகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தது. மருத்துவர் வைத்தியம் பார்க்கும்போது தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு மருந்து மாத்திரைகள் கொடுக்க மருத்துவருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். பிளஸ்சி மருத்துவர் என்ற எந்த போர்டும் மருத்துவமனையில் இல்லை. அவர் பெயர் போட்ட பிரிஸ்கிரிப்சன் சீட்டுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். மருத்துவர் தமிழ்செல்வன் என்பவரின் மருத்துவச்சான்றிதழ்களை வாங்கி பார்த்தபோது சரியாக இருந்தது என்றால் சரிதான். மருத்துவமனையில் தமிழ்செல்வன் தனியாக ஒரு அறையில் இருந்தார் என்றால் சரிதான். நோயாளிகளின் பெயர், விபரங்களை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எனது மேல் அதிகாரியும் தெரிந்துகொள்ளவில்லை. எந்த மருத்துவ ஆவணங்களையும், மருந்துகளையும் கைப்பற்ற வில்லை என்றால் சரிதான். ஆனால் அவற்றின் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டோம். ஊதியூர் போலீசாரிடம் புகார் கொடுத்த அன்றைய தினமே புகைப்படங்களை கொடுத்துவிட்டோம். மருத்துவமனையில் இருந்து இரத்த அழுத்தம் பார்க்கும் கருவி, சர்க்கரை அளவு காணும் கருவி, டெத்தஸ்கோப் ஆகியவற்றை கைப்பற்றினோமா என்றால் இல்லை. யாருக்கு எதிரி வைத்தியம் பார்த்தார் என பெயர் விபரம் என்னால் சொல்லமுடியுமா என்றால் இல்லை. நாங்கள் தகவல் சொல்லி எத்தனை மணிநேரம் கழித்து போலீசார் சம்பவ இடம் வந்தார் என்றால் 11.30 முதல் 12 மணிக்குள் வந்தார். மருத்துவமனையின் முன்னாடி சுகம் மருத்துவ மனை என்ற போர்டு இருந்தது என்றால் சரிதான். மருந்து விற்பனை செய்திருந்தால் அது சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் கைப்பற்றவில்லை

என்றால் மருந்து விற்றதற்காகவும், மருத்துவம் பார்த்ததற்கான கட்டணம் பெற்றதற்கான எந்த இரசீதும் இல்லை. எதிரி மருத்துவர் என்பதற்கான எந்த ஆவணங்களும் மருத்துவமனையில் இல்லை என்றால் சரிதான். ஆனால் எதிரி கைப்பட எழுதிய மருத்துவ சீட்டு இருந்தது. எதிரியும் அதனை தான்தான் எதிரினார் என்று ஒப்புக்கொண்டார். நான் மருத்துவர் தமிழ்செல்வனை விசாரிக்கவில்லை. தனிநபர் நோயளிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையை பூட்டி சீல் வைக்கும் போது மதியம் சுமார் 12 முதல் 1.30 வரை இருக்கும். சீல் வைக்கும்போது மருத்துவர் தமிழ் செல்வன் மருத்துவமனையில் இருந்தாரா என்றால் இருந்தார். ஒரு மருத்துவர் பணியில் இருக்கும்போது மருத்துவமனையை பூட்டி சீல் வைக்க இயலாது என்றால் சரியல்ல. மருத்துவர் பணியில் இருக்கும்போது தகுதியில்லாத ஒருவர் சிகிச்சை அளித்தால் மருத்துவ மனைக்கு சீல் வைக்கலாம். மருத்துவ சட்ட விதிகளை மீறி ஒரு மருத்துவர் பணியில் இருந்தபோது சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனையை பூட்டி சீல் வைத்தல் தவறு என்று சொன்னால் சரியல்ல. ஏன் என்றால் நாங்கள் சீல் வைத்தபோது தகுதியில்லாத ஆஜர் எதிரி சிகிச்சை அளித்ததால் மருத்துவ மனைக்கு சீல் வைத்தோம்.எதிரி சிகிச்சை அளித்ததாக சொல்லப்படும் நபரை விசாரித்து எனது மேல் அதிகாரி வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கின் உண்மை நிலவரங்களை அன்றைய தினம் பணியில் இருந்த மருத்துவர் தமிழ்செல்வன் என்பவரை விசாரித்ததால் தெரியும் என்றால் சரிதான். நாங்கள் ஆய்வு செய்த தேதியில் மேற்படி மருத்துவமனையில் மருத்துவர் தமிழ்செல்வன்தான் சிகிச்சை அளித்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்த சிகிச்சையும் அளிக்கவில்லை என்றும் எந்த மருந்துகளையும் பொதுமக்களுக்கு கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் எதிரி யாருக்கும் எவ்வித மருத்துவ சிகிச்சை கொடுக்கவில்லை என்றும், அந்த மருத்துவமனையில் முறையான மருத்துவர்தான் வைத்தியம் பார்த்தார் என்றும் எதிரி எந்த வைத்தியமும் செய்யவில்லை என்றும் விடுதலை சிறுத்தை கட்சியினர் உண்மைக்கு புறம்பான காரணங்களை கூறி எதிரியை மிரட்டி பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கில் பலமுறை தகராறு செய்து வந்தும், மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட தவறான புகாரின் பேரில் நாங்கள் விசாரணைக்கு சென்றபோது எந்த ஆவணங்களும் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படாத

நிலையில் எங்கள் முன்னிலையில் எவ்வித ஒப்புதல் வாக்கமூலமும் கொடுக்கவில்லை என்றும் மறுநாள் நாளிதழ் மற்றும் சமூக வலைதளங்களில் போலி மருத்துவர் கைது என்று பரவிய செய்தியை வைத்துக்கொண்டு 5 நாட்கள் காலதாமதாக பின் யோசனையின் பேரில் எவ்வித ஆவணங்களும் இல்லாமல் எதிரி மீது எனது மேல் அதிகாரியால் கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.07.18 19:02:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 107/2023 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | ரமேஷ்குமார் |
| Father Name | : | சென்னியப்பன் |
| Village | : | தாராபுரம் |
| Taluk | : | தாராபுரம் |
| Age | : | 45 |

**Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்டம் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் அலுவலகத்தில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். 13.02.2023 ஆம் தேதி ஊரக நலப்பணியில் இணை இயக்குநராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் குறை தீர்க்கும் நாளில் புகார் மனு பெறப்பட்டது. அந்த புகார் மனுவில் பிளஸ்சி என்பவர் தாராபுரம் – கொடுவாய் செல்லும் சாலையில் சுகம் கிளினிக் என்ற பெயரில் மருத்துவர் அல்லாது மருத்துவம் பார்த்துக்கொண்டிருப்பதாக புகார் பெறப்பட்டது. அந்த புகாரின் அடிப்படையில் 23.02.2023 ஆம்தேதி காலை சுமார் 11.30 மணியளவில் இணை இயக்குநராக கணகராணி அவர்கள் தலைமையில் நானும் என்னுடன் அலுவலக கண்காணிப்பாளர் ஹரிகோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் மேற்படி சுகம் கிளினிக்கிற்கு திடீர் ஆய்வு செய்ய வேண்டி சென்றோம். மேற்படி கிளினிக்கிற்கு 5,6 நபர்கள் மருத்துவம் பார்ப்பதற்காக காத்திருப்போர் இடத்தில் இருந்தனர். மேலும் உள்ளே சென்று பார்த்தபோது வழக்கின் எதிரி பிளஸ்சி தனது அறையில் ஒரு நபருக்கு மருத்துவம் பார்த்து கொண்டிருந்தார். அந்த அறையில் மருத்துவம் பெறுவதற்காக மற்றொரு நபரும் காத்துக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி மருத்தவம் பார்த்துக்கொண்டிருந்த நபருக்கு இரத்த அழுத்தம் பார்த்தும், ஊசி மருந்துகள் செலுத்தியும் மேலும் அந்த நபருக்கு குளுக்கோஸ் செலுத்துவதற்காக மேற்கண்ட உபகரணங்கள் தயார் நிலையில்

வைக்கப்பட்டிருந்தது. அவரை இணை இயக்குநர் விசாரித்தபோது பக்கத்து அறையில் வேறு ஒரு மருத்துவர் மருத்துவம் பார்த்துக்கொண்டிருப்பதாக ஆஜர் எதிரி எங்களிடம் கூறினார். பின்னிட்டு அவர் சுட்டிக்காட்டிய அறையை சென்றுபார்த்தபோது ஒரு மருத்துவர் அந்த அறையில் அமர்ந்திருந்தார். அவரை விசாரித்தபோது தனது பெயர் தமிழ்செல்வன் என்றும் சம்பவத்திற்கு முந்தைய நாள்தான் சுகம் கிளினிக்கிற்கு பணிக்கு சேர்ந்ததாக கூறினார். மேலும் அவரது பணிநேரம் என்ன என்று விசாரித்தபோது தனது பணி நேரம் காலை 9.30 மணி முதல் மதியம் 2.00 மணிவரை என்று கூறினார். மேலும், அங்கிருந்த மருத்துவர் வழங்கிய மருந்துச்சீட்டை விசாரித்தபோது அந்த சீட்டை தான் எழுதவில்லை என்று கூறினார். அங்கிருந்த நோயாளிகளை விசாரித்தபோது ஆஜர் எதிரி பிளஸ்சிதான் மருந்துச்சீட்டை எழுதிக்கொடுத்தார் என்று கூறினார். மேலும், அவரை விசாரித்தபோது அவர் கொடுத்த மருத்துவச் சான்றிதழ் மற்றும் அவருடைய பதிவு எண் ஆகியவற்றை சரிபார்த்தபோது அவர் ஒரு மருத்துவர் என ஊர்ஜிதம் ஆனது. பின்னிட்டு மருத்துவம் பெறுவதற்காக காத்திருந்த நபர்களை விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் தங்களுக்கு இதற்கு முன்பு மருத்துவம் பார்த்ததாகவும், ஊசிகளை போட்டதாகவும் மருந்து மாத்திரைகள் பரிந்துரைத்ததாகவும் கூறினார்கள். மேலும் அவரை விசாரித்தபோது எங்கள் விசாரணையில் அவர் சரியான முறையில் பதில் அளிக்கவில்லை. மேலும், ஒரு மருத்துவர் நோயாளி குறித்து சிகிச்சை அளிக்கவேண்டும் எனில் TN Clinical Establishment ACT மற்றும் Indian Medical Council ACT அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் ஆஜர் எதிரி அவ்வாறு மேற்படி சட்டத்தின் கீழ் எந்தவொரு அங்கீகாரமும் பெறவில்லை. மேலும், ஆஜர் எதிரி நடத்தி வந்த கிளிக்கை ஆய்வு செய்தபோது பயன்படுத்தப்பட்ட பஞ்சுகள், மருந்துகள், குளுக்கோஸ் பாட்டில்கள் ஆகியவை முறையே Tamil Nadu Bio Medical Waste Management விதிகள் எதையும் பின்பற்றாமல் ஆங்காங்கே சிதறிக்கிடந்தது. அது குறித்து ஆஜர் எதிரியிடம் இணை இயக்குநர் விசாரித்தபோது தான் பயன்படுத்தியதாக கூறினார். மேலும், அங்கிருந்த நபர்களை விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் அங்கு வரும் நோயாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தது உறுதியானது. பின்னிட்டு ஊதியூர் காவல் நிலையத்திற்கு இது சம்பந்தமாக தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும், கிராம நிர்வாக அதிகாரிக்கும் இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் ஒரு மணிநேரம் கழித்து ஊதியூர் காவல் நிலையம்

தலைமைக்காவலர் ரவி சம்பவ இடத்திற்கு வந்த பிறகு அவரது முன்னிலையில் மேற்படி கிளினிக்கை நாங்கள் சீல் வைத்து மூடினோம். பின்னிட்டு ஆஜர் எதிரியிடம் விசாரணைக்காக அவரது சான்றிதழ்களை ஒரு வாரத்திற்குள் கொண்டுவந்து எங்களது திருப்பூர் அலுவலகத்தில் சமர்பிக்குமாறு கூறினோம். அதன்படி 27.02.2023 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் மாவட்ட கலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஆஜர் எதிரி விசாரணைக்காக வந்தார். அவ்வாறு விசாரணைக்கு வந்தபோது எந்தவொரு ஆவணங்களும் கொண்டுவரவில்லை. அவரது ஆவணங்கள் கேரளா மூணாறில் இருந்து வருவதாக சொல்லி அன்று மாலை வரை அலுவலகத்திலேயே காத்திருந்தார். பின்னிட்டு மறுநாள் மேற்படி ஆவணங்களை பெற்று விசாரணைக்கு வரும்மாறு ஆஜர் எதிரியிடம் கூறினோம். அதன்படி ஆஜர் எதிரி மறுநாள் 28.02.2023 ஆம் தேதி சில ஆவணங்களை விசாரணைக்கு கொண்டுவந்து சமர்பித்தார். Bharath Sevak Samaj என்ற நிறுவனத்தின் மூலமாக பெறப்பட்ட Diplamo in Lab Technician ஆக பயிற்சி பெற்றதாக Certificate வைத்திருந்தார். ஆனால் மேற்படி சான்றிதலும் Tamil Nadu Para Medical Council ல் பதிவு செய்ய இயலாத சான்றாகும். இந்த சான்றிதழை வைத்துக்கொண்டு எவ்வாறு நோயாளிகளுக்க சிகிச்சை அளிக்கிறீர்கள் என்று விசாரித்தபோது சரியாக பதில் கூறவில்லை. பின்னர் அது குறித்து கேள்வி பதில் முறையில் விசாரித்தபோது ஆஜர் எதிரிதான் போதிய பயிற்சி இல்லாமல் அலோபதி முறையில் போலி மருத்துவம் பார்த்ததாக ஒப்புக்கொண்டார். மேலும் விசாரணையில் 2018 ஆம் ஆண்டு சித்தா முறையில் போலி மருத்துவம் பார்த்ததாக அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் அவர் மீது ஒரு குற்ற வழக்கு பதியப்பட்டதை ஒப்புக்கொண்டார். மேலும், அந்த வழக்கு சம்பந்தமாக 20 முறைக்கு மேல் பல்லடம் நீதிமன்றத்தில் ஆஜரானதாகவும் கூறினார். எங்கள் விசாரணையில் ஆஜர் எதிரி போலி மருத்துவம் பார்த்தது உறுதியானதால் அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஊதியூர் காவல் நிலையத்தில் இணை இயக்கநர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விசாரணைக்கு கூட வரச்சொல்லி யார் அழைத்தார் என்றால் இணைஇயக்குநர் கணகராணி அழைத்தார். எங்கள் மூவரை தவிர வேறு யார் யார் சோதனைக்கு எங்களுடன் வந்தார்கள் என்றால் முதலில் நாங்கள் சென்றோம் பின்னர் காவல் நிலையத்தில் தகவல் சொல்லி தலைமக்காவலர் ஒருவர் வந்தார். நாங்கள் சென்று

பார்க்கும்போது பிளஸ்சி என்ற பெயர் போட்ட மருத்துவ ஆவணங்கள் மற்றும் சான்றுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் சென்று பார்த்தபோது எத்தனை நோயாளிகள் இருந்தார்கள் என்றால் சுமார் 7 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் விலாசங்களை நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. சகம் மருத்துவமனையில் 11.30 வரை இருந்தோம். 11.30–11.40 மணியளவில் மருத்துவமனைக்கு சீல் வைத்துவிட்டோம். அங்கிருந்து எந்த ஆவணங்களும், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். புகார் கொடுக்க நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். புகாரானது 28.02.2023 அன்று கொடுக்கப்பட்டது. 23.02.2023 போலீசார் சம்பவ இடத்திற்கு வந்த நிலையில் அன்றைய தினம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்ய எவ்வித எழுத்து மூலமான உத்தரவும் வழங்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை 28.02.2023 ஆம் தேதி விசாரித்தார்கள். மருத்துவமனை சுமார் எத்தனை சதுர அடி இருக்கும் என்றால் 200 சதுர அடி இருக்கும். எத்தனை அறைகள் இருந்தது என்றால் 3 அறைகள் இருந்தது. நான் சென்றுபார்த்தபோது மருத்துவர் ஒருவர் பணியில் இருந்தார். என் மேலதிகாரி சிகிச்சைக்கு வந்த நோயாளிகளிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. தனிநபர் யாராவது மேல் அதிகாரிக்கு புகார் கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. பிளஸ்சி என்ற பெயரில் லெடடர் பேடு, பெயர் பலகை எதுவும் இல்லை. எதிரி பயன்படுத்தியதாக எந்த பொருட்களும் எங்கள் உயர் அதிகாரிகளால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். மருத்துவர் என்று எதிரி எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். விற்பனைக்கான மருந்துகள், ஊசிகள் இல்லை என்றால் சரியல்ல மருந்துகள் இருந்தன. அதை எனது மேல் அதிகாரி கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நாங்கள் ஆய்வுக்கு செல்லும்போது மருத்துவர் தமிழ்செல்வன் என்பவர் பணியில் இருந்தார். மருந்து விற்பனை நடந்தது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். மருந்துகள் இருந்தது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. மருந்துகளை போட்டோ எடுத்தோம். மருத்துவர் பணியில் இருக்கும்போது அவர் நோயாளிக்கு தேவையான மருந்துகளை எடுத்து பயன்படுத்த முடியும். அங்கிருந்த மருந்துகள் அனைத்தும் மருத்துவர் தமிழ்செல்வன் பயன்படுத்தக்கூடிய மருந்துகள்தான் என்றால் சரிதான். நாங்கள் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல்

எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையை நாங்கள்தான் பூட்டி சீல் வைத்தோம். MBBS படித்த மருத்துவர் தமிழ்செல்வன் நோயாளிக்கு மருந்துகள் கொடுக்க தகுதியானவர் என்றால் சரிதான். அன்றைய தினம் எதிரி யாருக்கும் எவ்வித மருத்துவ சிகிச்சை கொடுக்கவில்லை என்றும், அந்த மருத்துவமனையில் முறையான மருத்துவர்தான் வைத்தியம் பார்த்தார் என்றும் எதிரி எந்த வைத்தியமும் செய்யவில்லை என்றும் விடுதலை சிறுத்தை கட்சியினர் உண்மைக்கு புறம்பான காரணங்களை கூறி எதிரியை மிரட்டி பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கில் பலமுறை தகராறு செய்து வந்தும், மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப்பட்ட தவறான புகாரின் பேரில் நாங்கள் விசாரணைக்கு சென்றபோது எந்த ஆவணங்களும் எந்த சான்று பொருட்களும் கைப்பற்றவில்லை என்றும் எங்கள் முன்னிலையில் எவ்வித ஒப்புதல் வாக்கமூலமும் கொடுக்கவில்லை என்றும், மறுநாள் நாளிதழ் மற்றும் சமூக வலைதளங்களில் போலி மருத்துவர் கைது என்று பரவிய செய்தியை வைத்துக்கொண்டு 5 நாட்கள் காலதாமதாக பின் யோசனையின் பேரில் எவ்வித ஆவணங்களும் இல்லாமல் எதிரி மீது எனது மேல் அதிகாரியால் கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.07.18 19:02:47 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்